கொழும்புதுறைமுகத்தில்வேலைகளஸ்தம்பிதம்

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பதிவுப் எண் : 49
போன் 699

National Tamil Daily

மலர் 9
இதழ் 164
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 9 சபி ஆகி. 16 செவ்வாய்க்கிழமை [25 7-67]


## திருமலையிலும் வேலைநிறுத்தம்நீடிப்பு

கொழும்பு, திங்கள்

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் யாவும் ஸ்தம்பித்துள்ளன. துறைமுகத்திலுள்ள முக்கிய பகுதிகளில் வேலைசெய்துவந்த இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த4000 ஊழியர்கள் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் வேலைநிறுத்தம் செய்து வருவதே துறைமுகத்தில் வேலைகள் யாவும் ஸ்தம்பிக்கக் காரணமாகும்.

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க அங்கத்தினர் வேலைநிறுத்தம்செய்துவரும் ஜபர்ஜி ஸ்தாபனத்தாரின் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதில்லையென துறைமுகத்தைச்சேர்ந்த வர்த்தக சிப்பந்திகள் சங்க ஊழியர் தீர்மானித்து பகிஷ்கரித்து வந்தனர். நேற்று துறைமுகக் கூட்டுத்தாபன அதிகாரிகள் ஜபர்ஜி ஸ்தாபனத்துக்கென வந்த பொருள்களை இறக்குமதி செய்ததால் துறைமுகத்திலுள்ள வர்த்தக சிப்பந்திகள் சங்க ஊழியர்கள் அனைவரும் திடீர்வேலைநிறுத்தம் ஆரம்பித்தனர்.

திருக்கோணமலைத் துறைமுகத்தில் நேற்றுவேலைநிறுத்தம் ஆரம்பித்த திருமலைத் துறைமுக நாவாஇயக்குனர் கிளை ஊழியர்களும் ரலி குமாஸ்தா ஊழியர்களும் இன்னும் வேலைக்குத்திரும்பவில்லை. வேலைநிறுத்தம் இங்கும் நீடிக்கிறது.

# செனட்டர் பதவியை மாணிக்கம் துறந்தார்

## தமிழரசுக்கட்சியினர் மீதுகடும் கண்டனம்

### தமது தியாகம் வீணாகிவிட்டது என்கிறார்

கொழும்பு, திங்கள்

செனட்டர் முத்தையா மாணிக்கம் இன்று தமது செனட்டர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு செனட் சபையிலிருந்து வெளியேறிச் சென்றார்.

இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதா கொண்டுவரப்பட்டபோது திரு. முத்தையா மாணிக்கத்துக்கும் தமிழரசுக் கட்சியின் இதர பார்லிமெண்ட் செனட் சபை அங்கத்தவர்களுக்குமிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்த மசோதாவை எதிர்க்கப் போவதாகவும் எதிர்த்துப் பேசிவிட்டு எதிர்த்து வாக்களிக்கப் போவதாகவும் செனட்டர் மாணிக்கம் தெரிவித்திருந்தார். அபிப்பிராய பேதம் காரணமாக செனட்டர் மாணிக்கம் தமிழரசுக் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்தார். கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்தால் கட்சியின் சட்டதிட்டப்படி செனட்டர் பதவியையும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கட்சி கேட்டுக் கொண்டது. தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு வெளியேறுவதாகக் கூறிய செனட்டர் மாணிக்கம், இன்று தமது செனட்டர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறினார். இதற்கு முன்சபையில் அவர் விடுத்த அறிக்கையில் தமிழரசுக் கட்சியினர் தங்களது அடிப்படைக் கொள்கைகளையும் இலட்சியங்களையும் கைவிட்டு விட்டதால் தமிழரசுக் கட்சியின் எம். பிக்களும் செனட்டர்களும் ஒன்றாக ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கூறினார்.

தமிழரசுக் கட்சியின் இலட்சியத்துக்காகவும் கொள்கைகளுக்காகவும் தாம் செய்த தியாகங்களும், இதனால் ஏற்பட்ட பொருள் நஷ்டம், தடுப்புக் காவலில் இருந்ததன் மூலம் ஏற்பட்ட உடல் நல, உளநல நஷ்டங்கள், உழைப்பு யாவும் வீணாகி விட்டதென்றும் செனட்டர் மாணிக்கம் கூறினார் தமிழரசுக் கட்சி பதவி மோகத்தினால் இன்று தங்கள் கொள்கைகளையும் இலட்சியங்களையும் கைவிட்டதுடன் பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் மறந்துவிட்டனரென்றும் தாம் தனது மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொள்ள முடியாதிருப்பதாலேயே தாம் பதவியைத் துறப்பதாகவும் செனட்டர் மாணிக்கம் சொன்னார்.

மலைநாட்டு தமிழ் மக்களுக்கு தமிழரசுக் கட்சியினர் துரோகம் செய்துவிட்டார்களென்றும் திரு. மாணிக்கம் கூறினார்.

கடைசிநேரத்திலும் கூட தம்மை ராஜினாமாச் செய்ய வேண்டாமென்றும் சிம்மாசனப் பிரசங்கத்தை ஆதரித்துவாக்களித்தால் தொடர்ந்து செனட்டர் பதவியிலிருக்கலாமென்றும் தமிழரசுக் கட்சி எம். பி. ஒருவர் தம்மைக் கேட்டதாகவும் தாம் அதை மறுத்துவிட்டதாகவும் திரு.மாணிக்கம் தெரிவித்தார்.

## திருமணத்துக்கு செலவுசெய்யும் பணத்தில் ஒரு பகுதி கல்விக்குப்பயன்படுத்துங்கள்

### என்கிறார் அண்ணா

புதுக்கோட்டை, ஜூலை 24

'திருமண வைபவங்களுக்குச் செலவழிக்கும் பணத்தில் ஒரு பகுதியைக் கல்விக்கு ஒதுக்கி விடுமாறு' தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை தமிழக மக்களைக் கேட்டுக் கொண்டார்.

புதுக்கோட்டையிலுள்ள ஒரு. பகுதியில், உயர்நிலைப் பள்ளியொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே திரு. அண்ணாதுரை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் 25.6 புள்ளி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட முதல் மந்திரி, அது போதாதென்று கூறினார். பள்ளிக்கூடக் கட்டிடங்கள், தளபாடங்கள் ஆகியவற்றை அரசாங்கம் மட்டுமே அளிக்க முடியாதெனவும், அவற்றுக்கான நிதியைப் பெறுவதற்கு பொது மக்களும் உதவ வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

# மாவட்டசபைகள் அமைக்க ரூ. 10 அடையாள மான்யம்

## திருமலை, மூதூர் இறங்கு துறைகளுக்கு பணம் ஒதுக்கீடு

### புதிய நிதி ஆண்டு வரவு-செலவுத் திட்டமதிப்பீடு

கொழும்பு, ஞாயிறு

மாவட்டசபைகள் அமைப்பதற்கென இம்முறை வரவுசெலவுத்திட்த்தில் அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதேபோல் இராமநாதன் பல்கலைக் கழகத்துக்கென இம்முறையும் பத்து ரூபாய் அடையாளமான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது, நிதிஅமைச்சர் யு பி வன்னிநாயக்கா இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பித்த புதிய நிதி ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திக்கென 40 லட்சம் ரூபாயும் காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலை விஸ்தரிப்புக்கென ஒரு கோடியே நான்கு லட்சத்து 71 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது,

யாழ்ப்பாணத்தில் கனிஷ்ட பல்கலைக் கழகம் அமைப்பதற்கும் அதன் அதிபர், உதவி அதிபர், 17 விரிவுரையாளர் உட்பட சிப்பந்திகளின் சம்பளத்துக்கென 58 ஆயிரத்து 985 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைக்கு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 90 லட்சத்து 89 ஆயிரத்து 641 ரூபாய் புதிதாகச் செலவிடப்படும்.

ரயில்வே. தபால் தந்தி, போக்கு வரத்து, வனபரிபாலனம், துறைமுகம், கைத்தொழில் விவசாயம், சுகாதாரம், சமூக சேவை, மராமத்து உட்பட மற்றம் புதிய திட்டங்களுக்கென சென்ற நிதி ஆண்டிலும் இவ்வாண்டிலும் ஒதுக்கப்பட்ட தொகைகளைவிட 78 கோடியே 25 லட்சத்து 12 ஆயிரத்து 978 ரூபாய் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் காணி, விவசாயம், நீர்ப்பாசனம் குடியேற்றத் திட்டங்கள் ஆகிய உணவு உற்பத்தி அதிகரிப்புக்கான அம்சங்களுக்கென மட்டும் 23 கோடி 31 லட்சத்து 60 ஆயிரத்து 738 ரூபாய் புதிதாகச் செலவிடப்படவிருக்கிறது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கென தனி இலாகா ஒன்று அமைக்கப்படுவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1967—68-ம் ஆண்டிற்கான புதிய வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் சுமார் நூறு கோடி ரூபாய் துண்டு விழும் என நேற்று 'ஈழநாடு' பத்திரிகை மட்டுமே செய்தி வெளியிட்டிருந்தது வாசகநேயர்களுக்கு நினைவிருக்கும்.

[6-ம் பக்கம் பார்க்க]

இலங்கை நகரநிர்வாகம் பற்றி அறிய

## சென்னை மாநகராட்சி உறுப்பினர் 13 பேர் இன்று புறப்பட்டனர்

சென்னை, ஜூலை 24

சென்னை மாநகராட்சி காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் திரு. எஸ். ஜம்புலிங்கமும் மற்றும் மாநகராட்சி உறுப்பினர் 12 பேரும் இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக நாளை இங்கிருந்து புறப்படுகின்றனர். இலங்கையில் நகர நிர்வாகத்தை அறிந்து கொள்ளுமுகமாக இலங்கை விஜயத்தை மேற் கொள்ளும் இவர்கள் இம்மாதம் 28-ம்திகதி இலங்கைவந்து சேர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

அன்பைக் கொடுத்து சினத்தை விலக்கிடு. நன்மை புரிந்து தீமையை விலக்கிடு. கருணை காட்டி கயவனை வென்றிடு. உண்மை பேசி பொய்யனை வென்றிடு.

— புத்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

சுதுப்பாணம் பிலவங்கவஞு ஆடிமீ 9உ (25 7-67)

## வடக்கு, கிழக்கு அபிவிருத்தி

**கா**ங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைவிஸ்தரிப்பு, திருகோணமலைத் துறைமுக இறங்குதுறை, மூதூர் இறங்குதுறை அமைப்பு ஆகியவைகளுக்கென வரவு-செலவுத்திட்டத்தில் இம்முறை நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் செய்யவேண்டிய, செய்யப்படக்கூடிய பல நல்ல திட்டங்கள்இன்னும் இருக்கின்றன. இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகைகூடப் போதாதுதான். என்றுலும் சென்ற சிலவருடங்களாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் எந்தஒரு திட்டத்துக்கும் வேலைக்கும் நிதி ஒதுக்கப்படாமலிருந்து வந்ததுடன் ஒப்பிடுகையில் இம்முறை இந்த அளவுக்காவது நிதி ஒதுக்கப்பட்டிருப்பது நம்பிக்கையளிப்பதாகும்.

காங்கேசன் துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டியதன் அவசியம்பற்றி பல ஆண்டுகளாக எடுத்துக்கூறப்பட்டு வந்திருக்கிறது. இந்திய அரசாங்கம் சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டுவந்ததும், காங்கேசன்துறைது றைமுகம் விருத்தி செய்யப்படவேண்டியதன் அவசியம் பன்மடங்காகி விட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. கொழும்பு, திருமலைத் துறைமுகங்களில் வேலைநிறுத்தங்கள்காரணமாக ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் பெரிதும் தடைப்பட்ட சமயங்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்கள் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டுவந்தன. எனினும் அரசியல், வகுப்பு காரணங்களால் ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் காங்கேசன்துறைத் துறைமுகஅபிவிருத்தியில் அக்கறை காட்டவில்லை. இதேபோல்தான் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் விஸ்தரிப்பு விஷயத்திலும்ஆட்சி பீடத்திலிருந்தவர்கள்அசமந்தப் போக்குக்கொண்டிருந்தனர். காங்கேசன் துறைச் சிமெந்துத் தொழிற்சாலையை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை சில வருடங்களுக்கு முன்னரே, அதாவது வெளிநாட்டு நிபுணர்கள் யோசனை தெரிவித்த சமயத்திலேயே மேற்கொண்டிருந்தால் இன்று சிமெந்தில் நமது தேவைபெருமளவில் பூர்த்தியாகியிருக்கும்.

காங்கேசன் துறைத் துறைமுக அபிவிருத்திக்கு இம்முறை நாற்பது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சகல வசதிகளுமுள்ள நவீன துறைமுகமாக விருத்தி செய்வதற்கு இத்தொகை போதவேபோதாது. நமது பிரதிநிதிகள் தொடர்ந்து வற்புறுத்தி இடையில்ஒரு உபமானியம் ஒதுக்க அல்லது அடுத்த வரவு-செலவுத் திட்டத்திலாவது நியாயமான தொகை ஒதுக்க வழிகாண வேண்டும்.

பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கும் அரசாங்கத்தைத் தூண்டவேண்டியது அவசியம். வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு ஊக்கமும் உதவியும் அளித்தால் கைத்தொழில், விவசாயத்துறையில் நமது நாடு துரித முன்னேற்றமடையுமென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

தேசீய ஐக்கியம் பேச்சளவில் ஏற்படமாட்டாது; செயல்மூலம்தான் அதை ஏற்படுத்தமுடியும். இதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. எதையும் சரியான அத்திபாரத்துடன் உறுதியாகச்செய்யவேண்டியது அவசியம்.

# 106 வருடம் இன்று பூர்த்தியாகிறது

— இ. ஹோறஸ் —

**யாழ்ப்பாணம் அர்ச். சந்தியோகுமையோர் ஆலயத்துக்கு இன்றுடன் 106 வருடம் நிறைவுபெறுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**யா**ழ்ப்பாணம் அர்ச்.சந்தியோகுமையோர் தேவாலயத்துக்கு இன்றுடன் 106 வருடங்கள் பூர்த்தியாகின்றன. 1861-ம் ஆண்டு இதே மாதம், இதே தினம் வண. எச். சி. எல். மோறு ஆ அடிகளார் இத்தேவாலயத்துக்கான அடிக்கல்லை நாட்டினர். இக்கட்டிடத்துக்கான சகல வேலைகளையும் செய்துமுடித்தவரும் அடிகளாரே.

இன்று பிரமாண்டமாய் வானளாவக் காட்சியளிக்கும் இத்தேவாலயம் இருக்குமிடத்தில் 1783-ம் ஆண்டிற்கு முன் ஒரு பழைய கோவில் இருந்தது.

இவ்விசாரணைப் பங்கைச் சேர்ந்த மக்கள் 1617-ம் ஆண்டிற்குமுன் சைவசமயத்தவர்களாய் திகழ்ந்தனர். யாழ்ப்பாண அரசரின்படையில் பொறுப்புள்ள பதவிகளிலிருந்தவர்களும் இவர்களே.

1861-ம் ஆண்டில் வண. மோறூ ஆ அடிகளால் அடிக்கல் நாட்டப்பட்ட இத்தேவாலயம் அடிகளாரின் கண்காணிப்பிலும், மேஸ்திரி சந்தியோகுவின் மேற்பார்வையிலும் இம்மீசாமைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர்களாலும். சித்திரச் சிற்பிகளாலும் மிகச் சிறந்த முறையில் திறம்பட நிர்மாணிக்கப்பட்டது.

ஆலயம் கட்டத் தொடங்கிய காலத்தில் இவ்விசாரணைப் பங்கில் 38 கத்தோலிக்கக் குடும்பங்கள் மட்டுமே இருந்தனரென்பதும், இவர்களது செலவிலேயே இவ்வாலயம் கட்டிமுடிக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

19-ம் நூற்றூண்டின் இறுதியிலும் 20-ம் நூற்றூண்டின் முற்பகுதியிலும் இவ்வாலயம் பலதிருத்தங்களைப் பெற்றது. இக்காலத்தில்தான் ஆலயத்தின் கூரை பாலை மரத்தினுல் அமைக்கப்பெற்று ஓடுகளினுல் வேயப்பட்டது. கோயிலைச் சுற்றிப் படிகள் அமைக்கப்பட்டன. திரு இருதய ஆண்டவரின் பெரிய சுரூபம் பீடத்தில் ஏற்றிவைக்கப்பட்டது, சற்பிரசாதக் கிருதி அமைக்கப்பட்டது, கோவில் உள் நிலத்திற்கு சிமெந்து போடப்பட்டது. இப்படிப் பலவித திருத்தங்களை பெற்று இத்தேவாலயம் மேலும சிறப்புற்றுத் திகழலாயிற்று.

இதன் பின்பும் மேலும் சில திருத்தங்களை இத்தேவாலயம் பெற்றது.

1961-ம் ஆண்டில் இத்தேவாலயத்தின் நூற்றூண்டு நிறைவினையொட்டி இம்மீசாம் மக்கள்கொடுத்த அன்பளிப்புப்பொருட்களினுல் இத்தேவாலயம் பல உயரிய ஞாபகார்த்தப் பொருட்களைப் பெற்றுக்கொண்டது.

இவ்வாண்டின் திருநாளையொட்டி இவ்வாலயத்தின் சிறு பழுதுகள் திருத்தப்பட்டு இவ்வாலயத்தின் உள்ளே உள்ள வேலைப்பாடுகளுக்கு வர்ணம் தீட்டப்பட்டுள்ளமையால் இவ்வாலயம் மேலும் சிறந்துவிளங்குகின்றது.

## பதினுன்கு தெரு ஒளி பெறும

யாழ்ப்பாணம், செவ்வாய்

''சுன்னுகம் பட்டினசபை மின்சார விஸ்தரிப்பு வேலைகளுக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து கடனுகக் கிடைத்த ஒரு இலட்சத்து நாலாயிரம் ரூபாவின் பயனுக, அப்பட்டினசபையின் எட்டு வட்டாரங்களிலுள்ள பதினுன்கு தெருக்களுக்கு மின் வெளிச்சம் அளிக்கப்படுவதுடன், அததெருக்களில் வசிப்பவர்களின் இல்லங்களுக்கும், தொழில் நிலையங்களுக்கும் மின் தொடர்பு வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

உடுவில், திங்கள்

தொழில் நுட்பக் கல்வித் திணைக்களப் பகுதியினர் வெளியிடவிருக்கும் விவரணைப் புத்தகமொன்றில் பிரசுரிப்பதற்காக சகல தொழில் நுட்பப் பாடசாலைகளினதும் செய்முறைப்பயிற்சி, அறிமுகப் பயிற்சி ஆகியவைகளின் புகைப்படங்கள் சேகரிக்கப்படுகின்றன. இதுசம்பந்தமாக யாழ்ப்பாண கனிஷ்ட தொழில்நுட்பப் பாடசாலைக்கு விஜயம் செய்த தொழில்நுட்பத் திணைக்களப் பகுதிக் குழுவினர் பயிற்சிக் கூடங்களையும் அறிமுகப்பயிற்சி வகுப்புக்களையும் புகைப்படம் பிடித்துச் சென்றுள்ளனர்.

# 'பாகுபாடின்றி தொழில் செய்ய வேண்டும்'

## வடமாகாணசிகை அலங்கரிப்பாளர் சங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்

''வட மாகாணத்தின் சில பகுதிகளில் நமது சகோதரர்களின் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திடீர்திடீரென மூடப்படுவதை நமது சங்கம் மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறது. மாறிவரும் முன்னேற்றகரமான சம்பவங்களை ஒருசிலர் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து நிறுத்தலாமென நினைப்பது வீண் பிரமையே.'' என்ற தீர்மானம் வட மாகாண சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

எங்கள் சமூகமும் கடந்த காலங்களில் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகமாகவே கணிக்கப்பட்டு வந்துள்ளது. மனித உரிமை மறுக்கப்பட்டவர்களுக்காகப் போராடுபவர்களின் உதவியால்தான் நாமும் சிலசில உரிமைகளை இன்று பெற்று அனுபவிக்கமுடிகின்றது என்பதை எமது சங்கம் பரிபூரணமாக ஒப்புக்கொள்ளுகிறது. அதேவேளையில் ஒருசில ஊர் குழப்பிகளின் பின்னணியைக் கொண்டு வட மாகாணத்தின் சில பகுதிகளில் நமது சகோதரர்களின் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திடீர்திடீரென மூடப்படுவதை நமது சங்கம் மிகமிக வன்மையாக கண்டிக்கிறது. எனவே சிகை அலங்கரிப்பு நிலையங்கள் யாவும் எவ்வித பாகுபாடுமின்றி சகலருக்கும் தொழில்செய்யும் சகல சிகை அலங்கரிப்பு நிலையச் சொந்தக்காரர்களையும்கேட்டுக்கொள்கிறது என்றும் அத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு.கே.இராசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மட்டக்களப்பு சிகை அலங்கரிப்பாளர் சங்கச் செயலாளரும், மட்டக்களப்புமாநகரசபைஉறுப்பினருமான திரு. அந்தோனிமுத்து [முத்தழகு]வை வரவேற்பதற்கான கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. மற்றும் பலர் பேசினர். அ. நி.

## இன்றைய பலன்

25-7-67
செவ்வாய்க் கிழமை
[ஆடிமாதம் 9-ம் திகதி]

நட்சத்திரம் - சதயம் பகல் 10-06 வரை மேல் பூரட்டாதி
திதி-சதுர்த்தி இரவு 10-41 வரை.
சுபநேரம் 10-31-12-01
ராகுகாலம் 3-01-4-31

மேடம்- சகோதர சுகம்
ரிஷபம்-வாகன விருத்தி
மிதுனம்- புத்திர சந்தோஷம்
கடகம்- எதிரி பகை
சிம்மம்- வாழ்க்கையில் வெற்றி
கன்னி- ஆயுதபீடை
துலாம்- பெரியார் சகாயம்
விருச்சிகம்- விருந்துபசாரம்
தனுசு- எதிர்பாராத வரவு
மகரம்- மறதி
கும்பம்- இனப்பகை
மீனம்-வாக்குக் கலகம்

— சோதிடக் கலாநிதி —
திருமதி வேலுப்பிள்ளை

## பிள்ளைகளுக்கு தொழில்நுட்பப்பயிற்சி

சென்னை, ஜுலை23

பிள்ளைகளுக்குப் பாடங்களைக்கற்பிப்பதுடன் கைத்தொழில்களையும் பழக்க வேண்டுமென்று திரு ராஜாஜி இங்கு வலியுறுத்தினுர்.

சென்னையிலுள்ள பாரத தொழில் நுட்பக்கழகத்தின் 4வது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் அவர் இக்கருத்தை வற்புறுத்தினுர்.

இது தொழில் நுட்ப யுகம் என்றும் எமது நாட்டுப் பிள்ளைகள் மற்றைய நாட்டுப் பிள்ளைகளை விட எந்த விதத்திலும் புத்திகுறைந்தவர்களல்லவென்றும், அவர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி அவசியம் அளிக்கப்படவேண்டுமென்றும் ராஜாஜி மேலும் தெரிவித்தார்.

## நாட்டிலும் நகரிலும்

மது விலக்கு சம்பந்தமாக இந்தியாவிலுள்ள பல ராஜ்யங்கள் மனம் மாறிவருகின்றன. சுதந்திரமடைந்த சில வருடங்களுக்குள்ளே, பிற நாட்டவர்கள் அதிகமாக வாழும் டில்லி முதலிய சில இடங்களைத் தவிர, மதுவிலக்கு அநேகமாக இந்தியா முழுவதிலும் அமுலுக்கு வந்தது.

சுமார் பதினைந்து வருடங்களாக உலகில் வேறெந்த நாட்டிலும் காணமுடியாத வரை மது விலக்கு மிகத் தீவிரமாக அமுல்செய்யப்பட்டுவந்தது. இந்தியாவின் நிதி நிலைமை ஸ்திரமாக இருக்கும்வரை இதனுல் ஏற்படும் நஷ்டத்தை ஒருபடியாகச் சமாளிக்கமுடிந்தது. இரண்டுவித நஷ்டங்கள் மதுவிலக்கினுல் ஏற்பட்டன. மது விற்பனையால் வரிகள் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்துவந்த வருமானம் முற்றுக நின்றது. இரண்டாவதாக, மதுவிலக்கை ஒழுங்காக அமுல்செய்வதற்குப் பல செலவீனங்கள் ஏற்பட்டன.

தொடர்ந்து ஏற்பட்ட பல உணவு நெருக்கடிகளாலும், சீன, பாகிஸ்தான் யுத்தங்களாலும் ஏராளமான அந்நியச் செலாவணி வெளியே போகத் தொடங்கியதும் இந்தியாவின் நிதி நிலைமை மிகவும் ஈடாட்டம் கண்டது.

மத்திய அரசாங்கக் கட்சியாகிய காங்கிரஸ் இன்றும் மதுவிலக்கை ஆதரித்த போதிலும் ராஜ்ய அரசாங்கங்கள் பல, இதனுல் ஏற்படும் பெரிய வருமான நஷ்டத்தைக் கருதி, மனச்சாட்சிக்கு விரோதமானதென்றுலும் மது விலக்கை எடுத்துவிடத் தீர்மானித்துள்ளன.

இந்தியா முழுவதிலும் ஒவ்வொரு வருஷமும் கிட்டத்தட்ட 100 கோடி ரூபா மதுவிலக்கினுல் நஷ்டம் கண்டிருக்கிறது.

அமெரிக்கா 1917ம் ஆண்டில் மதுவிலக்குச்சட்டத்தை அமுல்செய்தது. பதினுறு வருடங்களுக்குப் பின் 1933ம் வருடம் மதுவிலக்கை முறையாக அமுல் நடத்த முடியாதென்பதைக் கண்டு அதைக் கைவிட்டுவிட்டது.

சென்ற பெப்ரவரி மாதம் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடந்தபின் ஏற்பட்ட புதிய ராஜ்ய அரசாங்கங்களில் கேரளமும், ஹரியானுவும் மதுவிலக்கை எப்பொழுதோ அகற்றிவிடுவதென்று தீர்மானித்தன. வங்காளமும் பஞ்சாபும் தொடர்ந்தன. காங்கிரஸ் கட்சி அரசுபுரிந்த மைசூரும் மத்திய பிரதேசமும் இப்பொழுது மதுவிலக்கைக் கைவிடத் துணிந்துவிட்டன

நம் நாட்டில் மதுவிலக்குச் சட்டம் எதுவும் இல்லாவிட்டாலும் இங்கு வேறு பல பிரச்னைகள் தோன்றியுள்ளன. இவற்றுள் முக்கியமானது கசிப்புப் பிசாசு. அரசாங்கம் வடிக்கும் சாராயத்தின் விலை போத்தல் இரண்டு ரூபாயிலிருந்து எட்டு ரூபாய்க்கு ஏறிவிட்டதனுல் ஏழை மக்கள் மலிவாகக் கிடைக்கும் கசிப்பைக் குடிக்கத் தொடங்கினுர்கள். வடக்கு, கிழக்கு, வட-மத்திய மாகாணங்களிலுள்ள குடியேற்றத்திட்டங்களில் வசிக்கும் லட்சக் கணக்கான மக்களுக்கு கள்ளோ, அரசாங்க வடிசாராயமோ கிடைப்பது

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகமெங்கும் எழுச்சி நாள் அமைதியாககொண்டாடப்பட்டது

## காங்கிரசையும ஒத்துழைக்குமாறு முதல் மந்திரி அண்ணு கோரிக்கை

சென்னை, ஜூலை24

**நேற்று தமிழ்நாடெங்கும் எழுச்சிநாள் கொண்டாடப் பட்டது.**

**தூத்துக்குடித்துறைமுகம், சேலம் எஃகாலைத் திட்டங் களை விரைவில் அமுல்நடத்துமாறு மத்தியஅர சாங்கத்தை வலியுறுத்துமுகமாகவே இந்த எழுச்சிநாள் கொண்டாடப்பட்டது.**

திலகர் கட்டடத்தில்நடை பெற்ற மாபெரும் கூட்டத் தில், காங்கிரஸ்தவிர. ஏனைய கட்சிகள் அனைத்தும் பங்கு கொண்டன.

### கவனித்து வருகிறது

தமிழக முதன் மந்திரி திரு சி.என். அண்ணுதுரை கூட் டத்தில் பேசுகையில். சம்பந் தப்பட்ட திட்டங்களையிட்டு மத்திய அரசு என்ன நடவ டிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைத் தமிழக அரசு கவனித்து வருவதாகக் கூறி னார்.

எழுச்சிநாள் தமிழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது, தூத் துக்குடித்துறைமுகம், சேலம் எஃகாலைத்திட்டங்களைவிரை வில் அமுலாக்க வேண்டிய அவசியத்தை மத்திய அர சின்மீது பதியவைக்கவே என்று முதன்மந்திரி வலியு றுத்தினார்.

### ஒத்துழைப்பு

இத்திட்டங்களைச் செயற்ப டுத்தவேண்டுமென்ற நோக் கத்தில் எல்லாக்கட்சிக ளும் ஒன்றுபட்டுள்ளன வென்று கூறிய முதல் மந் திரி, காங்கிரஸாரின் ஒத்து ழைப்பையும் கோரினார்.

'இது ஒரு கட்சிப் பிரச்னை யல்ல. இது ஒரு ராஜ்யப் பிரச்னையாகும்' என்றுகுறிப் பிட்ட முதன் மந்திரி திரு. அண்ணுதுரை. இப்பிரச்னை மீது ராஜ்ய அரசாங்கம்எடுக் கக்கூடிய நடவடிக்கை இன்னதென்பதைஇப்போது கூறமுடியாதுஎனக் கூறினார்.

## காஸாவிலிருந்து ஐ. அ. கு. பிரஜைகள் வெளியேற்ற இஸரேல் முடிவு

கெயிரோ, ஜூலை 24

காஸாப் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான ஐ அ. கு. பிரஜைகளை அங்கிருந்து அகற்றிவிட இஸ்ரேல் தீர் மானித்துள்ளது.

இப்பிரஜைகள், அப்பகுதியி லுள்ள மக்களை இஸ்ரேல் அதிகாரிகளுடன் ஒத்து ழைக்கவேண்டாமென்று தூண்டிவருவதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இதன் காரணமாக காஸா விலிருந்து சம்பந்தப்பட்ட ஐ. அ. கு. பிரஜைகளைச் சினய் பாலைவனத்துக்கு அகற்றிவிட இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

## லியூ-ஷா-ஷி

பீகிங், ஜூலை 24

சீன அதிபர் லியூ-ஷா-ஷி இன்னும் அதிகாரபூர்வமா கப் பதவியினின்றும் நீக் கப்படவில்லை என்பதை நவ சீன செய்தித் தாபனம் ஒப் புக்கொண்டுள்ளது.

# அரபு நாடுகளுக்கு ரஷ்ய ஆயுத உதவி

## திரு. எபான் கவலை

நியுயோர்க், ஜூலை 24

சூயஸ் கால்வாய் பகுதி யில் ஐ. அ. குடியரசு துருப் புகள் போர் நடவடிக்கைக ளில் ஈடுபட்டுவந்துள்ளது, அப்பகுதிகளில் போர் நிறு உத்தரவை அவர்கள்மதிப்ப தில் அக்கறை காட்டவில்லை என்பதைக் காட்டுவதாக இங்கு ஒருடெலிவிஷன்பேட் டியில், பேசுகையில், இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபான் கூறினார்.

அரபு நாடுகளுக்கு சோவி யத்ரஷ்யா அண்மைக்காலத் தில் விநியோகம்செய்துள்ள ஆயுதங்களின் தொகை, மேற்கு ஆசியாவிலுள்ள சம பல நிலையைப் பாதித்துள்ள ளதாகவும், இஸ்ரேலும் பிற நாடுகளிலிருந்து ஆயுதம் பெறவேண்டியேற்படுமென் றும் அவர் மேலும் தெரி வித்தார்.

### இரகசிய பேச்சுக்கு தயார்

அரபு நாடுகள் இஸ்ரேலு டன் இரகசிய முறையில் பேச்சுவார்த்தைகள் நடா த்த விரும்பினுல், இஸ்ரேல் அதற்கு உடன்படுமென திரு எபான் கூறினார்

# நைஜீரிய உள்நாட்டுப் போர் உக்கிரமாக நடக்கிறது

லாகோஸ், ஜூலை 24

நைஜீரியாவில் உள்நாட் டுப் போர் தொடர்ந்து உக் கிரமாக நடந்துகொண்டிரு க்கிறது.

பிரிந்து சென்ற கிழக்கு நைஜீரியாவின் தலைநகரான எனுக்குக்கு அருகேயுள்ள பட்டினமான சூக்காவில் சமஷ்டி துருப்புகளுக்கும், புரட்சித் துருப்புகளுக்குமி டையே கடும் போர் நிகழ் வதாக லாகோஸ்வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

ஆனுல் கிழக்கு நைஜீரியத் தலைவர் கோர்ணல் ஒஜுக்கு சூக்கா நகரம் தமது துருப் புகளின் கைகளில் மீண்டும் வீழ்ந்துள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

அத்துடன், முன்னேறி வந்த சமஷ்டித் துருப்புகள் இப்போது தமது துருப்புக ளால் துரத்தியடிக்கப்படுவ தாகவும் அவர் தெரிவித் தார்.

# 'நீண்டகாலப் போருக்கு ஐ. அ. கு. தயாராக வேண்டும்'

## அமெரிக்கா மீது கடும் கண்டனம்

## ஜனுதிபதி நாஸரின் புரட்சிதின உரை

கெய்ரோ, ஜூலை24

**ஐ. அ. குடியரசு மக்கள் நிபந்தனையின்றிச் சரணடைவதா அல்லது தொடர்ந்து போராடுவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டு மென்று ஐ.அ.கு. ஜனுதிபதி நாஸர், ஐ.அ.கு.வின் புரட்சியின் 15-வது ஆண்டு நிறைவு தினக் கொண்டாட்டத்தின் போது நேற்று கெய்ரோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பேரணி யொன்றில் பேசுகையில் கூறினார்.**

**சரணடைவது என்பது ஒருபோதும் நடக்கமுடியாத காரியமாகையால், இஸ்ரேலுடன் ஐ. அ. குடிய ரசு தொடர்ந்து போராடவேண்டியிருக்கும் என் ருர் நாஸர். ஐ. அ கு. தனது மிகவும் நெருக் கடியான கட்டங்களொன்றில் இப்போதுசென்று கொண்டிருப்பதாக நாஸர் தெரிவித்தார்.**

இஸ்ரேலுடனுன போரா ட்டம் இராணுவ. அரசியல், பொருளாதார ரீதியில் நீண்டகாலம் நடைபெறு மெனவும், அது மிகவும் சிர மமானதாகவிருக்கும் என் றும்ஜனுதிபதிநாஸர் மேலும் கூறினார்.

### முதலாவது உரை

மேற்கு ஆசிய போருக்குப் பின்னர் நாஸர்ஆற்றும் முத லாவது உரை இதுவேயா கும். மேற்குஆசியப் போரி ஞல் ஐ.அ.கு.வுக்குஏற்பட்ட விளைவுகளுக்குநாஸர் மீண்டும் தாமே முழுப்பொறுப்பை யும் ஏற்றுக்கொண்டார்.

மேற்கு ஆசியப் போருக்கு காரணம், அமெரிக்க-இஸ் ரேல் சதிக்கூட்டேயாகும் என நாஸர் குற்றஞ்சாட்டி ஞர். அடக்கமாக இருக்கும் படி ஐ.அ.கு,வை அறிவுறுத் திய அமெரிக்கா, மறுபக்கம் இஸ்ரேலுக்குத் துணைபுரிந்து தூண்டிவிட்டதாக நாஸர் தெரிவித்தார்.

### 'கதவை அடைக்க மாட்டோம்'

'மேற்கு ஆசிய பிரச்னைக் கான அரசியல் தீர்வுக்குநாம் கதவை அடைக்கமாட் டோம். தேவையெனில், அமெரிக்காவுடன் பேசவும் நாம் தயங்க மாட்டோம்' என்ருர் நாஸர்.

ஐ.அ.கு.வின் இராணுவம் புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமென்றும், ஒவ் வொரு கிராமமும் இரா ணுவ மயமாக்கப்படுமென் றும் ஜனுதிபதி நாஸர் அறி வித்தார்.

நாஸரின் உரை, ரேடியோ, டெலிவிஷன் மூலம் நாட்டு மக்களுக்கு ஒலிபரப்பப்பட் டது.

## 100 வட வியட்னுமியர் கொல்லப்பட்டனர்

சைகோன், ஜூலை 24

வட வியட்னுமில் ஒரு காட்டுப் பகுதியில் நடை பெற்ற கடும் சண்டையில் 100 வட வியட்னும் துருப் பினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இச்சண்டையில் 35 அமெ ரிக்கப் போர்வீரர் கொல் லப்பட்டதாகவும் அது தெரி வித்தது.

# முன்னுள் கொங்கோப் பிரதமர் ஷோம்பே விவகாரம்

## சுப்ரீம கோர்ட் தீர்ப்பை பூமேடியான் அங்கீகரித்தார்

அல்ஜியர்ஸ், ஜூலை 24

முன்னுள் கொங்கோப் பிர தமரான ஷோம்பேயை கொங்கோவுக்குத் திருப்பி அனுப்புமாறு அல்ஜீரிய சுப் ரிம் கோர்ட் அளித்த தீர்ப் புக்கு அல்ஜீரிய ஜனுதிபதி பூமேடியான் தமது அங்கீகா ரத்தை அளித்துள்ளதாக அதிகாரபூர்வமான வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

ஆகவே ஷோம்பே கொங் கோவிலுள்ள கின்ஷாஷா விற்கு அனுப்பப்படுவது இப்போது ஏறத்தாழ நிச்ச யமாகிவிட்டது எனக் கூற லாம்.

கின்ஷாஷாவில், அவரை எதிர்பார்த்து மரணதண் டனை காத்திருக்கிறதென் பது வாசகர்கள் அறிந்ததே.

# அமெரிக்காவில் மீண்டும் இனக்கலவரங்கள்

## நாட்டை இரண்டாகப்பிரிக்க நீக்ரோ பிரதிநிதிகள ஆலோசனை

நியுயோர்க், ஜூலை 24

அமெரிக்காவில் இனக்கல வரங்கள் மீண்டும் தலை தூக்கியுள்ளன.

அண்மையில் நியுயோர்க் கில் நடைபெற்ற இனக்கல வரங்களைத் தொடர்ந்து நேற்று மிச்சிகன் நகரிலும் சம்பவங்கள் நிகழ்ந்துள் ளன.

### மிச்சிகனில்

மிச்சிகனில் நீக்ரோக்கள் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிசார்மீது கற்கள் வீசினர். பல கடை களை உடைத்தனர்.

இதற்கிடையில் நியூ ஜெஸியிலுள்ள நியு யோர்க்கில் 1000 நீக்ரோப் பிரதிநிதிகள் ஒரு மகாநாட் டில் கூடினர்.

### இரு வேறு நாடுகள்

அமெரிக்க நாட்டை கறுப்பு, வெள்ளை என இரு வேறு நாடுகளாகப் பிரிப் பது பற்றிய சாத்தியக்கூறு களை அப்பிரதிநிதிகள் விவா தித்தனர்.

நீக்ரோக்களுக்கு இரா ணுவப் பயிற்சி அளிப்பது, நீக்ரோ தேசிய பல்கலைக் கழகமொன்றை நிறுவுவது, மற்றும் நீக்ரோக்கள் சம் பந்தப்பட்ட பல விஷயங் களை பிரதிநிதிகள் ஆலோ சித்தனர்.

## டெலிபோன் சேவை ஆரம்பிக்கப்பட்டது

பண்டத்தரிப்பு, திங்கள்

விளான் உபதபாற்கந் தோருக்கு டெலிபோன் சேவை ஆரம்பிக்கப்பட் டது. இந்த டெலிபோன் இணைப்புக்கான முயற்சியை காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வ நாயகம் மேற்கொண்டிருந் தார். மானிப்பாய் தபாற் கந்தோருடன் இந்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டி ருக்கிறது.

## 'மாணவனை வழி நடத்தும பாதை'

யாழ்ப்பாணம், செவ்வாய்

"எதிர்காலத்தை வள மாக்கும் பொறுப்பு ஆசிரி யர்கள் கையிலே தங்கி யிருக்கிறது. ஆசிரி யர்கள் காட்டும் நல்வழி யும் பெற்ருேர் காட்டும் அக்கறையுமே ஒரு மாண வனை வளர்ச்சிப்பாதையில் முன்னேற வழி செய்கிறது" என திருநாவுக்கரசு வித் தியாசாலை பெற்ருேர் தின விழாவில் உரையாற்றிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் கூறி ஞர். பெற்ருேர் - ஆசிரியர் சங்கத்தினரால் நடத்தப் பட்ட இவ்விழாவுக்கு திரு. அ. தர்மலிங்கம் தலைமை வகித்தார். திரு. செ. பர ராசசேகரம் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

## முன்னேஸ்வரம

யாழ்ப்பாணம், செவ்.

ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேதமுன்ன நாதஸ்வாமி மகோற்ஸ வம் நேற்று ஆரம்பமாகி யது. வேட்டைத் திரு விழா அடுத்தமாதம் 17-ம் திகதியும். தேர்த்திருவிழா 18-ம் திகதியும், தீர்த்தத் திருவிழா 19-ம் திகதியும் நடைபெறுவதுடன் மகோற் சவம் முடிவடையும்.

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்.

சர்வதேச நிலையும், இல ங்கைப் பிரச்னைகளும் என் னும் பொருள்பற்றி திரு. என். சண்முகதாசன், இம் மாதம் 28-ம் திகதி மாலை, யாழ்ப்பாண நகர மண்ட பத்தில் சிறப்பு சொற் பொழிவு நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் சார்ஜன்டை சப்-இன்ஸபெக்டர் தாக்கினுராம்

யாழ்ப்பாணம், செவ்.

பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரை பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் தாக்கினுராம். இச்சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்துக்கருகாமையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் நடைபெற்ற நோட்டு வழக்கொன்றிற்காக இரத்தினபுரியிலிருந்து வந்திருந்த சப்இன்ஸ்பெக்டர் ஒருவரே யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரைத் தாக்கினுராம். வழக்கு விசாரணையின் பின்னர் சம்பந்தப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பொருட்களைத் தம்மிடம் தருமாறு சம்பந்தப்பட்ட சப்இன்ஸ்பெக்டர் இந்த சார்ஜண்டிடம்கேட்டதாகவும்,இதற்குசார்ஜண்ட் மறுத்ததைத் தொடர்ந்தே அவர் தாக்கப்பட்டதாகவும் பொலிஸில் செய்யப்பட்டுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வட பகுதி உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சி. தவராசாவினுல், தாக்குதலுக்குள்ளான பொலிஸ் சார்ஜண்ட் விசாரணை செய்யப்பட்ட பின்னர், வைத்திய பரிசோதனைக்காக சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பிவைக்கப்பட்டார்.

(ந.நி.)

## தீர்மானம் தோல்வி

யாழ்ப்பாணம், செவ்.

சிங்கள ஆசிரியர் வேண்டுமென்ற தீர்மானம் மண்டைதீவு மகாவித்தியாலய பெற்ருேர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் அனுவதிப்பாரின்றித் தோல்வியடைந்தது. இப்பிரேரணை திரு. கைலாசபிள்ளையால் கொண்டு வரப்பட்டது.

## சிரமதானம

சாவகச்சேரி, திங்.

மீசாலை தெற்கைச் சேர்ந்த மண்தெருவான வாவட்டம் வீதியை சிரமதானம் மூலம் செம்மையான வீதியாக்கும் பணியை இங்குள்ள தொண்டர்கள் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு போயா தினத்திலும், 10-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் இப்பணி மேற்கொள்ள பட்டுவருகிறது

## புதிய கட்டளைக் குரவர்

பண்டத்தரிப்பு, திங்.

இளவாலைப்பங்கின் உதவிக் கட்டளைக் குரவராக வண. பிதா. தியோஜினஸ் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

## ''நவீனசந்தையும் மின்சாரமும நெல்லியடிக்கு விரைவில்வரும''

### வைத்தியசாலைத் திறப்பு விழாவில் உதவி கமிஷனர் தகவல்

உடுப்பிட்டி, திங்கள்

'நெல்லியடிப் பட்டினத்தில் விரைவில் 2 லட்சம் ரூபா செலவில் மின்சாரம் விநியோகிக்கவும், நவீன சந்தை ஸ்தாபிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது' என்று உதவி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் கரவெட்டி மேற்கு அரசடி வீதியிலுள்ள பழைய மருத்துவமனையை நெல்லியடிப் பட்டினசபையின் புதிய இலவச ஆயுர்வேத வைத்தியசாலைத் திறப்புவிழாவிற்குத்தலைமை வகித்துப் பேசுகையில் கூறினுர்.

இவ்வைத்தியசாலையை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்துப் பேசுகையில், 'மேற்கத்திய வைத்திய முறையில் நல்ல அம்சங்கள் இருப்பது போல, எமது நாட்டுப் பரம்பரை வைத்திய முறையான ஆயுர்வேதத்திலும் பல நல்ல அம்சங்கள் உள்ளன. இவ்வைத்திய முறையின் பெருமையை உணராத பலர் இம்முறையைக் கைவிட்டுவருவது வேதனைக்குரியது. வறுமை காரணமாகவே அநேகர் ஆயுர்வேத சிகிச்சை பெற முன்வருகிருர்கள்' என்ருர்.

## புகார்பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். மாநகரசபையின் விசேஷ ஆணையாளர்கள் நிர்வாகததிலுள்ள அதிருப்தி பற்றி சிலர் செய்த புகாரைத் தொடர்ந்து உள்ளூராட்சி அமைச்சரின் உதவி நிரந்தரக்காரியதரிசி திரு. பத்மநாதன் நேற்று முன்தினம் விசாரணை நடத்தினுர்.

இவ் விசாரணையின்போது கலைக்கப்பட்ட மாநகர சபையின் சார்பில் திருவாளர்கள் துரைராசா, தெய்வேந்திரம், கந்தையா, இராஜசூரியர் ஆகியோர் அங்கு சமுகம்கொடுத்திருந்தனர். குழாய்நீர் விநியோகம், மின்சார விஸ்தரிப்பு வேலைகள் ஆகியவற்றில் விசேஷ ஆணையாளர்கள் நிர்வாகத்திலுள்ள குறைகள் பற்றி விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டதாம்.

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்.

மறவன்புலோநித்தர்புலம் மூத்துமாரி அம்மன்கோவில் மகாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இன்னிசை நிகழ்ச்சிகளும் மற்றும் மகேஸ்வர பூஜையும் நடைபெற்றன.

## உருமபராய் ப.ச.காரியாலயம

உரும்பராய், திங்கள்

உரும்பராயிலுள்ள அரசினர் டிஸ்பென்சரி விரைவில் இடம் மாறவிருக்கிறது. இக்கட்டிடத்தைக்காலி செய்யுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டிருக்கின்ருர். கட்டிடம் காலி செய்யப்பட்டதும் உரும்பராய்ப் பட்டினசபைக் காரியாலயம் இக்கட்டிடத்தில் இயங்குமென நம்பப்படுகிறது. அண்மையில் பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட உரும்பராய்ப்பட்டினத்திற்கு பட்டினசபைக் காரியாலயத்திற்கான இடம் ஒன்றில்லா திருப்பதாலேயே டிஸ்பென்சரியை உதவிக்கமிஷனர் காலி செய்ய வேண்டுமெனக் கோரியிருப்பதாக அறுயப்படுகிறது.

## பிரிவுபசாரம

காங்கேசன்துறை, திங்.

காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்ற திரு. கா. றிச்சாட் சுப்பிரமணியத்துக்கு ஒரு பிரிவுபசாரவிழா நடைபெற்றது. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. ஏ. வி. சதாசிவம் தலைமைவகித்தார். விழா ஆரம்பமாகு முன் பலாலிச் சந்தியிலிருந்து திரு. சுப்பிரமணியம் மேளவாத்தியத்துடன் விழா மண்டபத்துக்குஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வழக்கறிஞர் திரு அ. குமரகுரு, திரு. எஸ். சிவக்கொழுந்து, திரு. சி. சண்முகதாசன், திரு. ராகவமூர்த்தி ஆகியோர் இளைப்பாறிய தலைமை ஆசிரியரின் சேவை நலனைப் பாரட்டிப் பேசினர். அன்ஞரின் உருவப்படத்தை பாடசாலை மண்டபத்தில் பட்டின சபைத் தலைவர் திரை நீக்கம் செய்து வைத்தார்.

## திடீர் சோதனை

வவனியா, திங்கள்

வவனியாவிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றில் பொலிஸ் திடீர்ப்பரிசோதனைக் குழுவொன்று சோதனையிட்டு அங்கிருந்த குழந்தைகள் பால் உணவு, தீப்பெட்டி மற்றும் கட்டுப்பாட்டு விலைப் பொருள்களை உடனடியாகவே பொதுமக்களுக்கு விற்பனை செய்ய ஒழுங்குசெய்யப்பட்டது




டிஸ்பிரின்

வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனுல் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

J.W.T. R.C.

### தேவை

அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதியில் உணவு, சிற்றுண்டிகள் சமைப்பதற்கு ஏற்ற ஒருவர் உடன் தேவை. உணவும் தங்கும் வசதியும் கொடுக்கப்படும். வயது, இரு நற்சாட்சிப்பத்திரம், கோரும் சம்பளம், முதலிய விபரத்துடன் 3-8-67க்கு முன் கீழே தரப்பட்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

மு. காங்கேசு,
19, பூமாக்குளம் வீதி,
32 முல்லைத்தீவு.

### தேவை

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
[வரைவுள்ளது]

பதவி:- லொறிச் சாரதி.
வேதனம்:-
ரூ. 80/- — ரூ. 150/-ம்
14 தர ரூ. 5/-
சம்பள நிர்ணய சபைப்படி படிகளும்.
பிணை:- உரொக்கம்
ரூ. 500/-
வயது:- 31-7-67 இல் 25 இல் இருந்து 45 வரை.

தராதரம்:- 7 ஆம் வகுப்பு சித்தியெய்திய விண்ணப்பதாரர்கள் சாரத்திய சான்றிதழ் பெற்ற திகதி, அனுபவ விபரங்களுடன், சமீபத்தில் பெற்ற இரண்டு நற்சான்றுப் பத்திரங்களுடன் தமது சொந்தக் கையெழுத்தில் 31-7-67க்கு முன் பதிவுத் தபாலில் மனுச் செய்யவும்.

காரியதரிசி,
யாழ்ப்பாணம்
ப. நோ. கூ. ச. சமாசம்,
[வரைவுள்ளது]
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 31


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
பேரயாதினங்களில் 4காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்


# யாழ். வேம்படி மகளிர் 7-ம் தடவையாக மீண்டும் சாம்பியன்

## யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பாடசாலை மகளிர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட மகளிர் கல்லூரிகளுக்கிடையேயான 11 வது விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி இம்முறையும் சாம்பியனானது. இது வரை 11- ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி தொடர்ந்து 7-வது முறையாக சாம்பியனாகியுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்டத்தில் அநேகமான கல்லூரிகள் பங்கு பற்றிய இவ் விளையாட்டுப் போட்டியில் ஆரம்பத்தில் இருந்து முடியும் வரையும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரியுடன் சாம்பியனுக்கான போட்டியில் பெரும் பலப் பரீட்சையில் ஈடுபட்டது. ஒரே கண்ணோட்டத்தில் ஓட்டம் சம்பந்தமான போட்டிகளில் சுண்டிக்குளியும், பாய்தல் சம்பந்தப்பட்ட போட்டிகளில் வேம்படியும் முதலிடங்களைப் பெற்றன. முடிவில் வேம்படி மகளிர் கல்லூரி 201 புள்ளிகளைப்பெற்று சாம்பியனானது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 190 1/2 புள்ளிகளைப்பெற்று 2-ம் இடத்தைப் பெற்றது.

மற்றும் யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி 61 புள்ளிகளும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 61 புள்ளிகளும், உடுவில் மகளிர் கல்லூரி 58 புள்ளிகளும், நடேஸ்வராக் கல்லூரி 47 புள்ளிகளும், பருத்தித்துறை மெதடிஸ் மகளிர் கல்லூரி 34 புள்ளிகளும், சாவகச்சேரி றிபேக் கல்லூரி 29 புள்ளிகளும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 21 புள்ளிகளும் முறையே பெற்றன.

பரிசளிப்பு விழாவுக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. ஆர். ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி சுந்தரலிங்கம் வீராங்கனைகளுக்குப் பரிசில்களை வழங்கினார்.

மேற்பிரிவுச் சாம்பியனாக நடேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த என். சந்திராவும், மத்தியபிரிவுச் சாம்பியனாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கே. நடராசாவும், கீழ்ப்பிரிவுச் சாம்பியனாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி எஸ். நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த [மேற்பிரிவு] கே. செல்வலக்ஷ்மி [4'7''] உயரம் பாய்ந்தும், வேம்படியைச் சேர்ந்த [மத்தியபிரிவு] வி. திலகாவும் றிபேக் கல்லூரியை சேர்ந்த செல்வி. என். செல்லத்தம்பியும் [4'4''] உயரம் பாய்ந்தும், கீழ்ப்பிரிவில் சுண்டிக்குளியைச் சேர்ந்த செல்வி எஸ். நடராசா 150 யார் தூரத்தை 20 வினாடிகளில் ஓடி முடித்தும், [மேற்பிரிவில்] கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். உத்தமராணி 200 யார் தூரத்தை 29.4 செக்கனில் ஓடி முடித்தும் திறம் விளையாட்டு வீரர்களாகக் கௌரவிக்கப்டனர்.

சிலமுக்கியபோட்டிமுடிவு விபரங்கள் வருமாறு:-மேற்பிரிவு-100 யார் ஓட்டம்: செல்வி எம். இராசலிங்கம், எஸ். உத்தமராணி, எஸ். இராஜேஸ்வரி. 200 யார் ஓட்டம்: எஸ். உத்தமராணி, [29.4 செக். சமபுதிய சாதனை] செல்வி எம். இராசலிங்கம், செல்வி ஜே. சண்முகம். 80 யார்தடை ஓட்டம்: செல்வி. பி. சிவகுரு, செல்வி எம். அரசரத்தினம். செல்வி. பி. வீரசிங்கம். நீளம் பாய்தல்: எஸ். இராஜேஸ்வரி, செல்வி எம். இராசலிங்கம் கே. செல்வலக்ஷ்மி, செல்வி பி. சிவகுரு, வி. பூமாதேவி, பருதி வட்டம் வீசுதல்: கனகாம்பிகை கனகரத்தினம் [77'11'' புதிய சாதனை], செல்வி ஜே. சண்முகம், எம். சந்திரா. குண்டெறிதல்: எம் சந்திரா சி. கனகாம்பிகை, செல்வி எஸ். கணேசன், ஈட்டி எறிதல்: எம். சந்திரா, செல்வி ஜி. கனகரத்தினம். என். குணரத்தினமலர், அஞ்

[6-ம்பக்கம்பார்க்க]

### அரசாங்க கேள்விகள்

பொது வேலைத் திணைக்களம்

என் 1892 - யாழ்ப்பாணக் கிளை வேலைக்களத்திற்கு பாதுகாப்பான உயர்ந்த முட்கம்பி வேலியும், பெரிய இரும்புப் படலையும், நீர் வழங்கலுக்கு வெளிப்புற வேலைகளும் செய்தல். கேள்விகள் முடிவு திகதி 16-8-67.

என் 1934 - மன்னார் மாவட்டத்தில் விற்பனை திணைக்கள கட்டிடங்கள் அமைத்தல் [2] பரந்தனில் ஓவசியர் குடிமனையும், களஞ்சிய அறையும் அமைத்தல். கேள்விகள் முடிவு திகதி 23-8-67.

இதன் முழு விபரங்களுக்கும் 20-7-67 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். G. P. 4089

# "3 நெசவு நிலையங்களாவது நெடுந்தீவுக்குத் தேவை"

## மகாவித்தியாலய விளையாட்டுவிழாவில் யாழ். அரசாங்க அதிபர்

நெடுந்தீவு, திங்கள்

''தீவுப்பகுதிக்குக்கொடுக்கப்பட்டிருந்த நெசவுநிலையங்களில் ஒன்றையாகுதல் இங்கு அவைக்காமை பெரும்கவலையளிப்பதாகும். இருந்தும் இங்கு குறைந்தது மூன்று நெசவு நிலையங்களையாவது அமைத்துக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். அதற்கான உதவிகளைச்செய்து தர ஒருபோதும் பின்னிற்கமாட்டேன்'' என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நெடுந்தீவு மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். ஒரு விளையாட்டு மைதானமும் இங்கு அவசியம் தேவை. அரசாங்கம் சுவீகரித்த விளையாட்டு மைதானம் இதுவரை பாடசாலைக்குக் கையளிக்கப் படாதது குறித்துக் கவலை அடைகிறேன். இப் பிரச்னையை விரைவில் தீர்த்து வைக்க முயற்சி மேற்கொள்வேன் என்றும் அரசாங்க அதிபர் சொன்னார் மகாவித்தியாலய அதிபர் திரு. என். குருநாதன் பேசும்போது ஒரு விளையாட்டுப்போட்டியை நடாத்த 1 1/2 மைல் தூரம் செல்ல வேண்டியிருப்பதாகக் கூறினார்.

டாக்டர் கபிரியேல் தம்பதிகளும் விழாவில் கலந்து கொண்டனர்.

மஞ்சள் இல்லம் இவ்வருடச்சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. பச்சை இல்லம் 2வதாகவும், சிவப்பு இல்லம் 3வதாகவும் வந்தன. பின்வருவோர் இல்லச்சாம்பியன்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

கீழ் பிரிவு ஆண்கள்-நா. தில்லையம்பலம், மத்தியபிரிவு ஆண்கள்-பி. அமிர்தநாதர், மேற்பிரிவு ஆண்கள்-ச. தருமபுத்திரன் கீழ்பிரிவு, பெண்கள்-க. கேதீஸ்வரி, மத்திய பிரிவு, பெண்கள்-நா. புஷ்பவதி. மேற்பிரிவு பெண்கள்-ந. இலட்சுமி. பல


இப்பொழுது திரையிடப்படுகிறது

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] காமினி [மருதானை]
ராஜ் [நீர்கொழும்பு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த




ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ் விஸ்வநாதன்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
எல். விஜயலெட்சுமி
நடித்த
இருவல்லவர்கள்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 4-45, 7-00, 9-45
JohnForsythe
Ann Margret
KITTEN WITH A WHIP

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
24 to 26 of July 67
HELP
(The Beatles)


### வரி விளம்பரம்

#### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடவீதியிலுள்ள 17-ம் இலக்க வீடு வாடகைக்கு கொடுபட இருக்கிறது. குடியிருப்பதற்கும் கைத்தொழில் நடாத்துவதற்கும் வசதியுண்டு. தேவைப்படுவோர் நேரில் பார்வையிடலாம். 2437

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வளை, 7-45 திரைஇசை. 8-15 இஸ்லாமிய கீதங்கள்.
344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.
344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.
இரவு 6-15 நிலைய ஒலிப்பதிவுகள், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 வீணை — ஜெயலட்சுமி, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம் — கே. பி. ராஜமாணிக்கம், 10-15 தேர்ந்தஇசை.

### உதைபந்தாட்டம்

உடுவில், திங்கள்

கந்தரோடை இளைஞர் கோஷ்டிக்கும், தாவடி வடக்கு இளைஞர் கோஷ்டிக்குமிடையில் கந்தரோடை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இருதரப்புக் கோஷ்டியினரும்தலா மூன்று கோல்களைப்பெற்றுக்கொண்டனர்.

திரு. எஸ். சிவ சுப்பிரமணியம் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

### துணை ஆயர் கலந்து கொண்டார்

பண்டத்தரிப்பு, திங்கள்

கடந்தவாரம் இங்கு விஜயம் செய்த திருமலை துணை ஆயர் பி. தியோகுப்பிள்ளை அர்ச். அன்னம்மாள் தேவாலயத்தில் சிறுவர்க்கு நடைபெற்ற மதச் சடங்குகளில் கலந்து அவற்றை நிறைவேற்றி வைத்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி பூகம்பத்தில் 1000 வீடுகள் சேதம்

இஸ்தான்புல், ஜூலை 23 துருக்கியில் நேற்றும் இன்று அதிகாலையும் இரு தடவைகள் ஏற்பட்ட பூகம்பத்தினுல் பலத்த உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 1000 வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின. இதனுல் மக்கள் அங்குமிங்குமாக சிதறி ஓடினர். சரித்திரப் பிரசித்திபெற்ற புராதனச் சுவர் ஒன்று விழுந்து எரிந்து சாம்பலாகியது. பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்ட இடங்களுடன் தொடர்புகொள்ள முடியாமலிருப்பதாகவும் தகவல் தொடர்புகள் முற்ருகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. துருக்கியின் மூன்றில் ஒருபகுதி பிரதேசம் பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்டதாகவும் பலத்த அபாயத்திலிருந்து துருக்கி இன்னமும் தப்பிவிடவில்லையெனவும் கடைசியாகக் கிடைத்த செய்தியொன்று தெரிவித்துள்ளது.

## அன்னதான மடம

மல்லாவி, திங்

வன்னிவிழாங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய அன்னதான சபையினர் ஒரு நிரந்தர அன்னதான மடம் கட்டுவதற்கான முயற்சி மேற்கொண்டுள்ளனர். இதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் சமீபத்தில் நடைபெற்றது. துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து நாட்டி வைத்தார்.

## யர்ழ். வேமபடி...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

சல் ஓட்டத! சுண்டிக்குளிமகவிர் கல்லூரி, கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம், உடுவில்மகளிர்கல்லூரி.

மத்தியபிரிவு: 100 யார் ஓட்டம் செல்வி எ. பொன்னுத்துரை, செல்வி கே. நடராசா, என். அஞ்சனுதேவி, 150 யார் ஓட்டம்; எஸ். சிவபூரணம், செல்வி. கே. நடராசா, எம். இரத்தினசிங்கம் 80 யார் தடை ஓட்டம்: செல்வி. எஸ். பாலுப்பிள்ளை, செல்விபி. கனகலிங்கம், ஆர். பூலோகசுந்தரி. நீளம் பாய்தல்: ஜி. நித்தியவதி, செல்வி கே. நடராசா, செல்வி ஐ. சிவசுப்பிரமணியம். உயரம்பாய்தல்: வி. திலகா. என். செல்வநிதி, எம். இரத்தினசிங்கம், பரிதி வட்டம் வீசுதல்: செல்வி எம். பெரியதம்பி, என். ரேவதிலக்ஷ்மி, செல்வி ரி. காந்தரட்ணம். குண்டெறிதல்: செல்வி. எம். பெரியதம்பி, என். நிர்மலா, ரி. ஸ்ரீ ரங்கநாயகி. அஞ்சல்ஓட்டம்: உடுவில் மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி.

கீழ்ப்பிரிவுப் போட்டிகள்: 100 யார் ஓட்டம்; செல்வி எஸ். நடராசா [15 செக். புதிய சாதனை] என். இந்திரமலர், என். சந்திரமலர். 150 யார் ஓட்டம்: செல்வி எஸ். நடராசா, எஸ். இராஜேஸ்வரி. என். விஜயகுமாரி. 80 யார் தடை ஓட்டம்: செல்வி ஐ. நவரட்ணராசா, எஸ். இராஜேஸ்வரி, செல்வி எம். மயில்வாகனம். உயரம் பாய்தல்: என். விஜயலட்சுமி சி. இரத்தினகுமாரி, செல்வி என். இராசரத்தினம். நீளம் பாய்தல்: செல்வி. எஸ். நடராசா, செல்விஎ. திஸ்ஸநாயகம், செல்வி எம். வேலாயுதம். கிரிக்கெட் பந்து வீசுதல்: ஆர். சீதாலக்ஷ்மி, செல்வி எஸ். சற்குணம், என் யோகராணி. அஞ்சல் ஓட்டம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி.

விவசாயிகள்

## சாதனை புரிந்தால் கௌரவம

கொழும்பு, ஞாயிறு

விவசாய உற்பத்தியில் சாதனைகள்ஏற்படுத்தும் விவசாயிகளைக் கௌரவப்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றது,

உணவுப்பொருட்களை சிறப்பாக உற்பத்தி செய்து சாதனைகள் புரியும் விவசாயிகளைக் கௌரவப் படுத்துவதென்று இன்று நடைபெற்ற அரசாங்கக்கட்சி பார்லிமெண்டரிக்குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## வவனியா கச்சேரி காய்கறி விற்கும்

வவனியா, திங்.

வவனியாக் கச்சேரியில் மரக்கறி விற்கப்படவிருக்கிறது. தரமான மேல்நாட்டு உள்நாட்டு மரக்கறி வகைகளை இங்கு விற்பனை செய்யப்படும். இது சம்பந்தமாக வவனியா அரசாங்க அதிபர் திரு. வி. ஸி. பெரேரா கண்டி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு ஏற்ற ஒழுங்குகள் செய்துள்ளார். இங்குள்ள விற்பனவு இலாவில் கிடைப்பதிலும் மலிவாகவே கச்சேரியில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதற்கான முயற்சிகளில் வவனியா சேமலாபச் சங்கத் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், காரியதரிசி திரு. எஸ். கணேஷ் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

## இரண்டு வருட கடூழியம்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு பேதுருப்பிள்ளை- வஸ்தியாம்பிள்ளையிடம் வேலைக்கிருந்து அவருக்குச் சொந்தமான 125 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தையும், ரூபா 150 பெறுமதியான சைக்கிளையும், ரொக்கப்பணம் ரூபா 410 யும் களவாடியதாக சிலாபத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் நாகலிங்கம் என்பவர் மீது முல்லைத் தீவுப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு மாஜிஸ்திரேட் திரு. இ. பரமகுரு முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையையும் பின்பு இரண்டு வருடம் பொலிஸ் பாதுகாப்பில் நன்னடத்தையாக இருக்க வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

## திருநாள்

பண்டத்தரிப்பு, திங்கள்

பெரிய யாகப்பர் என அழைக்கப்படும் கிறிஸ்து நாதரின் 12 சீடர்களில் முதன்மை வாய்ந்தவருமான புனித யாகப்பர் திருநாளை இன்று க[illegible]கம் பூரா[illegible]ம்.

## மாவட்டசபைகள்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தேசிய அரசாங்கத்தின் மூன்ருவது வரவு-செலவு மதிப்பீட்டை நிதிஅமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார்.

1967—68-ம் நிதி ஆண்டில் 193 கோடியே 19 லட்சத்து 17 ஆயிரத்து 606 ரூபாய் வருமானம் கிடைக்குமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதே ஆண்டில் 292 கோடியே 73 லட்சத்து 122 ஆயிரம் ரூபாய் செலவு செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இதனுல் 99 கோடியே 53 லட்சத்து 94 ஆயிரத்து 594 ரூபாய் துண்டு விழுகிறது.

காணி நீர்ப்பாசனம், விவசாயம், கல்வி, சுகாதாரம் ஆகிய அமைச்சுகளின் செலவுகளுக்கு இம்முறை அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் காணி நீர்ப்பாசனம் விவசாயம், குடியேற்றத்திட்டங்கள், விவசாய விஸ்தரிப்பு ஆகியவைகளுக்கே புதிதாக மிகக்கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

காணி, விவசாயம், சுகாதாரம், கல்வி ஆகிய அமைச்சுக்களின் செலவினங்களுக்கென புதிதாக மொத்தம் 78 கோடியே 25 லட்சத்து 12 ஆயிரத்து 978 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மொத்தத் தொகையில் காணி நீர்ப்பாசன, விவசாய, குடியேற்ற, கிராம விஸ்தரிப்பு ஆகியவைகளுக்கென மட்டும் 23 கோடியே 31 லட்சத்து 60 ஆயிரத்து 738 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

காணி நீர்ப்பாசன விவசாய வளங்களுக்கென 10 கோடியே 40 லட்சத்து 28 ஆயிரத்து 520 ரூபாய் புதிதாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

குடியேற்றத்திட்டங்கள் கிராம விஸ்தரிப்பு, இளைஞர் குடியேற்றம் ஆகியவைகளுக்கென 3 கோடியே 85 லட்சத்து 99 ஆயிரத்து 250 ரூபாய் புதிதாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

புனர் நடுகை மற்றும் பயிர்ச்செய்கை புனரமைப்பு அபிவிருத்திக்கென 46 லட்சத்து 83 ஆயிரத்து 460 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### கல்வி அமைச்சு

கல்விஅமைச்சின்கீழ் புதிய கட்டிடங்கள் முதலியவை உட்பட ஆரம்பக் கல்விக்கென ஒரு கோடியே 36 லட்சத்து 02 ஆயிரத்து 500 ரூபாய் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ளது. கனிஷ்ட பிரிவு கல்விச் செலவுகளுக்கென 94 லட்சத்து 15 ஆயிரத்து 750 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உயர்தரக் கல்விக்கு 71 லட்சத்து 98 ஆயிரத்து 918 புதிதாகச் செலவிடப்படும்.

தொழில் நுட்பக் கல்விக்கென 64 லட்சத்து 53 ஆயிரத்து 560 ரூபாயும் ஆசிரியர் பயிற்சிக்கென 35 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் புதிதாகச் செலவிடப்படும்.

### பல்கலைக்கழகம்

பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களுக்கென ஒரு கோடியே 72 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், வித்தியோதய பல்கலைக்கழகத்துக்கு 27 லட்சம் ரூபாயும் வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்துக்கு 23 லட்சம் ரூபாயும் செலவினங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இராமநாதன் பல்கலைக் கழகத்திற்கென இம்முறையும் வரவு—செலவுத் திட்[illegible] ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### யாழ்ப்பாண கனிஷ்ட பல்கலைக்கழகம்

யாழ்ப்பாண கனிஷ்ட பல்கலைக்கழகத்துக்கும் அதிபர், உபஅதிபர், பதினேழு விரியிரையாளர்கள், ஒரு பதிவுக் காரியஸ்தர், ஒரு நூல்நிலைய பொறுப்பாளர் மற்றும் 28 சிப்பந்திகள் ஆகியோரின் சம்பளங்களுக்குமென 58 ஆயிரதது 985 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது யாழ்ப்பாண வித்தியாலய, குரு வித்தியாலயங்களுக்கென ஒரு கோடியே 63 லட்சத்து 62 ஆயிரத்து 455 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரசேவைச் செலவுகளுக்கென ஒரு கோடியே 77 லட்சத்து 02 ஆயிரத்து 882 ரூபாய் புதிதாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கென மட்டும் 90 லட்சத்து 89 ஆயிரத்து 641 ரூபாய் புதிதாகச் செலவிடப்படும்.

### சிமெந்துதொழிற்சாலை

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கென ஒருகோடியே 4 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது

காங்கேசன்துறைமுக அபிவிருத்திக்கென 40 லட்சம் ரூபாய்ஒதுக்கப்பட்டுள்ளது. திருக்கோணமலை இறங்குதுறைக்கு ஐந்து லட்சம் ரூபாயும் மூதூர் இறங்குதுறைக்கும் அதனுடன் சேர்ந்த ரஸ்தாவின் சீரமைப்புக்கும் 50,000 ரூபாயும் செலவிட ஒதுக்கப்பட்டிருககிறது.

கைத்தொழில் அபிவிருத்திக்கென 14 கோடியே 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், கடற்ரொழில் விருத்திக்கென மூன்று கோடி ரூபாயும் புதிதாகச் செலவிடப்படும்.

சந்திரசேகரா சொன்னராம்!

# 'சொய்ஸா அறிந்தால் கொன்றுவிடுவார்'

## களத்தாவை இரட்டை கொலை வழக்[illegible]ல் சாட்சியம

அநுராதபுரம், திங்கள்

''1-ம் எதிரி சொய்ஸாவிற்குச் சொந்தமான உழவு யந்திரத்திலிருந்து ஒரு டயரை ஜூலியஸ் சந்திரசேகராவிற்ருர். அதன்பின் இவ்விஷயத்தை சொய்ஸா அறிந்தால் என்னைக்கொன்றுவிடுவார்'' என்று குறிப்பிட்டார்.

களத்தாவை இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியமளித்த எம். ஐ. எம். கபூர் மேற்கண்டவாறு கூறினுர். இவ் வழக்கு அநுராதபுரம் மாஜிஸ்டிரேட் திரு. பலின்டா ரணசிங்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் அல்பிரட் டி சொய்சா, களுஅல்பேர்ட், வில்லி மாமா ஆகியோர் ஜூலியஸ்சந்திரசேகரா, பி. கே. டி. பெரேரா ஆகியோரை கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கபூர் தொடர்ந்து கூறியதாவது:

1-ம் எதிரியினுல் சந்திரசேகராவிற்கு கொடுக்கப்பட்ட ஒரு செக் திரும்பிவந்தது. சொய்ஸா ஏமாற்றி விட்டார்என சந்திர சேகரா என்னிடம் கூறினுர். கொழும்பிலுள்ள சந்திரசேகராவின் தாயார் வீட்டிற்கு சென்று சொய்ஸாவின் செக்கைபற்றி கூறினேன். அதன்பின் நானும் சந்திரசேகராவும் 1-ம் எதிரியின் உழவு யந்திரத்திலிருந்து 1 டயரை விற்ருேம். சந்திரசேக்ரா எனக்கு 50 ரூபாய் தந்தார். அதன்பின் நான் சந்திர சேகராவை காணவில்லை.

சந்திரசேகராவுடன் வசிப்பவராகக் கூறப்படும், விஜயரத்ன என்பவர், டயர் விற்கப்பட்ட மூன்ருவது நாள், சந்திரசேகரா அநுராதபுரத்திற்கு சென்ருரென்றும் அதன்பின் திரும்பிவரவில்லையென்றும் கூறினுர். ஜோன் அப்புகாமி என்பவர் தான் 1-ம் எதிரி சந்திரசேகரை தேடுவதாகவும், விஜயரத்ன மேலும் தெரிவித்தார்.

15 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் விஜயரத்னவை சந்தித்தேன். சந்திரசேகரா திரும்பிவரவில்லையென்றும், திறப்பு தன்னிடம் இருப்பதாகவும் கூறினுர்.

கொட்டாஞ்சேனையைசேர்ந்த பென்சனியர் தியாகராசா சந்திரசேகரா கூறியதாவது: ஜூலியஸ் சந்திரசேகரா நீர்ப்பாசன இலாகாவில் கடமையாற்றியபோது அவருக் கெதிரான வழக்கொன்றில் நான் 1000 ரூபா பிணைப்பணம் கட்டினேன். நான் ஓய்வுபெற்று வந்ததும் குளிர்பான நிலையமொன்றை ஆரம்பித்தேன். ஜூலியஸ் சந்திரசேகரா என்னுடன் வேலை செய்ய விரும்பவில்லை. நான் அடிக்கடி அவருக்கு பண உதவி செய்தேன்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், குறுக்கு விசாரணை செய்கையில் ஜூலியஸ் சந்திரசேகராவிட இருந்து 'செக்' கிடைத்தது ஞாபகமிருப்பதாக சாட்சிகூறினுர்.

## நாட்டிலும் நகரிலும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மிகவும் அரிது. அவர்கள் கண்டகண்ட விதமான பொருட்களால் தங்கள் சொந்த வடியை வடித்து, அணு அணுவாக மனிதனைக் கொல்லும் இந்த நெருப்புத் தண்ணீரைப் பருகுகிருர்கள்.

கசிப்பு உற்பத்தியாக்கும் முதலாளிகள் பணத் திமிரும் அதிகாரச் செருக்கும் பிடித்து அடிதடி, சண்டை, கொள்ளை, கொலை முதலியவற்றில் அச்சமின்றி ஈடுபடுவதோடு நில்லாமல், அரசியலிலும் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

கசிப்பு அரக்கனைக் கொல்வதற்குப் பலர் பலவிதமான யோசனைகளைத் தெரிவித்துள்ளார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருப்பதுபோல, இலங்கை முழுவதிலும் மரவரிச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்பது ஒரு யோசனை.

அரசாங்க வடிசாராயத்தை மூன்று ரூபாய்க்குக் குறைத்தால் கசிப்புத் தொல்லை குறையுமென்று சில நாட்களுக்கு முன்பு ஒரு பௌத்தபிக்குவே யோசனை தெரிவித்துள்ளார்.

கசிப்பு வடிப்பதைத் தடுப்பதில் அரசாங்கம் ஒரு நிமிஷமும் தாமதிக்கப்படாது. இலங்கையில் மதுவால் ஏற்பட்டிருக்கும் பிரச்னை இதுதான்.

—வழிப்போக்கன்

வியாபாரம பெருக
விளமபரமசெய்க

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org